**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 122 / 2024**

**2026ம் வருடம் ஜூலை மாதம் 17ம் நாள் வெள்ளிக்கிழமை**

வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.வீரக்குமார் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புனிதகுமார் | த/பெ | கதிரேசன் |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் 3வது வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. வரிரசீதுகள் 8 எண்ணம் அசல் வா.சா.ஆ.1

2. 07.03.2006 இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2

3. 20.08.2024 கிரைய ஆவணம் இணையதள சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகின்றது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை